நடிகர்கள்

மனோஹர்	சந்திரன்
எஸ். நாராயண ராவ்	கந்தசாமி
ஸி. வி. வி. பந்துலு	நாராயணசாமி
ப்ரண்ட் ராமசாமி	சங்கரய்யர்
சந்திர பாபு	வெங்கடேசன்
டி. கே. ராமச்சந்திரன்	பாலு
டி. வி. சேதுராமன்	காசிம்
துரைசாமி	மிஸ்டர் சிதம்பரம்
கோபாலாச்சாரி ...	போலீஸ் இன்ஸ்பெக்டர்
கண்ணாம்பா	லக்ஷ்மி
வனஜா	தாரா
எம். சரோஜா	பார்வதி
ஸி. கே. சரஸ்வதி	காந்தம்மா
வேணுபாய்	ரங்கம்மா
ராஜலக்ஷ்மி	வேலாயி
கமலா	நடனம்

லக்ஷ்மிஸ்ரீதேவி — சாந்தகுமாரி ஜயஸ்ரீ — சேதுகுமாரி — முதலியோர்.

டைரக்டர்	கே. பி. நாகபூஷணம்
அஸோஸியேட் டைரக்டர் ...	இன்டூரி வெங்கடேஸ்வர ராவ்
உதவி டைரக்டர்	டபிள்யூ. ஆர். ஸீனிவாசன்
...	டி. கே. எஸ். பாரதி
	எஸ். சாம்பசிவ ராவ் பாபுஜீ
√வசனம், பாட்டு	எஸ். டி. எஸ். யோகியார்
சங்கீதம்	எம். டி. பார்த்தசாரதி
நடனம்	அனில் குமார் சோப்ரா
ஒளிப் பதிவு டைரக்டர்	பி. எல்லப்பா
படப் பிடிப்பு	டி. வி. சிங்தாகூர்
ஒலிப் பதிவு	பி. ரங்கா ராவ்
ஆர்ட் டைரக்டர்	எம். எஸ். ஜானகிராம்
மேக்-அப்	சகாதேவ ராவ் தாப்கரே
எடிடிங்	என். கே. கோபால்
லேபரேட்டரி சூப்ரடென்டெண்ட் ...	வி. ராமசாமி
ப்ரொடக்ஷன் எக்ஸிக்யூடிவ் ...	பி. ஸி. நம்பியார்
... ...	பி. புச்சிபாபு
ஸ்டூடியோ	ஜெமினி

ரிகார்டிங் R. C. A ஸவுண்ட் ஸிஸ்டம்

அன்று இண்டர் பரீட்சையின் ரிஸல்ட் வரும் தினம். சந்துரு பெய்லாய் விட்டான் - காரணம், அவனுக்குப் படிப்பில் பிடிப்பில்லை; படம் போடுவதில் பிரியம்.

தந்தை வக்கீல் நாராயணசாமி அவனைக் கோபித்துக்கொள்கிறார்; தாய் லக்ஷ்மி சமாதானம் செய்கிறாள்; தங்கை பார்வதியும், மாமன் மகள் தாராவும் அவனுக்காக அநுதாபப் படுகின்றனர்.

தாரா, லக்ஷ்மியின் அண்ணன், வாத்தியார் கந்தசாமியின் மகள்; சந்திரனும் தாராவும் சின்ன வயது முதலே இணைபிரியாத ஜோடிகள்.

கந்தசாமி பரம ஏழை, அவன் மனைவி காந்தம்மா ஒரு அடங்காப் பிடாரி; அவளிடம் அவன் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல; அநேகமாய் அந்தக் குடும்பம் லக்ஷ்மியின் தயவால்தான் நடந்து வருகிறது.

வெளிக்குப் பகட்டாயிருந்தாலும் நாராயணசாமியின் குடும்ப நிலை உண்மையில் சரியில்லை; அவருக்கு க்ஷயம் ஆரம்பமாகியிருந்தது. எனவே, சீக்கிரம் பெண் பார்வதியின் கல்யாணத்தை முடித்துவிட நினைக்கிறார்.

அவர் குமாஸ்தா சங்கரய்யன் ஒரு நயவஞ்சகப் பேர்வழி; அவன் மூலம் ரங்கம்மா என்னும் விதவையின் மகன் வெங்கடேசன் பார்வதியை மணம் செய்து கொள்கிறான்.

இக்கல்யாணச் செலவுக்காக வீடு அடமானம் வைக்கப்படுகிறது; இத்தனைக்கும் சீர் வரிசை போதவில்லை யென்று சம்பந்தி ரங்கம்மாளுக்குக் கோபம். இக் கல்யாணத்தோடேயே தாரா சந்திரன் கல்யாணத்தையும் செய்யவில்லை யென்று காந்தம்மாளுக்குக் கடுங்கோபம். இக் கல்யாணத்தின் பயன் பார்வதி மாமியாரின் கொடுமைக் ககப்பட்டுப் படாதபாடு படுகிறாள்.

கால வெள்ளத்தினால் மலை மடுவாகிறது, மடு மலையாகிறது. ஒன்று மற்றொன்றாக மாறுகிறது. நாராயணசாமியின் குடும்பம் நாளுக்கு நாள் கீழ்த் தசை அடைகிறது; கந்தசாமியின் குடும்பம் செழித்து வளர்ந்தில் புரளுகிறது.

ஒரு நாள் சந்திரன் ஏதோ அனாவசியச் செலவு செய்து விட்டான் என்று நாராயணசாமி கண்டபடி திட்டிவிடுகிறார். அதை ஒட்டுக் கேட்ட சந்திரன் மனம் நொந்து அன்றிரவே வீட்டைவிட்டு வெளியேறுகிறான். சித்திரக் கலையில் பட்டம் பெறாமல் திரும்புவதில்லையென்று தாயாருக்கு ஒரு கடிதம் எழுதி வைக்கிறான்; தாராவிடம் ஜாடையாக சமாசாரத்தைக் கூறுகிறான். இதனால் நாராயணசாமியின் வியாதி முற்றிவிடுகிறது. அவர் படுத்த படுக்கையாகிறார்.

இதற்கிடையில் காந்தம்மாளுக்கு அடித்தது யோகம்; கொஞ்ச நாள் களுக்குமுன் லக்ஷ்மியிடமிருந்து வாங்கி லாட்டரியில் போட்ட பத்து ரூபாய்க்கு ஒன்றரை லக்ஷம் அவளுக்குப் பரிசு விழுகிறது. கூரை வீடு மாடி வீடாகிறது. காந்தம்மாளின் குதூகலம் குரங்காட்டம் போடுகிறது.

குமாஸ்தா சங்கரய்யன் இனி நாராயணசாமியிடம் பசையில்லை யென்று கண்டு அவரை அந்தரத்தில் விட்டு காந்தம்மாவிடம் மானேஜராகச் சேர்ந்து கொள்கிறான்.

லக்ஷ்மிக்குத் கடன்காரர்கள் உபத்திரவம், வீட்டில் தட்டு முட்டுச் சாமான்கள் உட்பட அனைத்தும் ஜப்தி. கணவன் தேகஸ்திதியோ கவலைக்கிடமாக மாறுகிறது. இதை யறிந்த பார்வதி மாமியாரிடம்

[illegible] கூத்தாடிப் பரிசுப் பணத்தை வாங்கி வருவதாக வாக்களித்து விட்டுப் புருஷனோடு இங்கு வருகிறாள். அதே சமயம் டாக்டர் நாராயணசாமியை மதனப்பள்ளிக்குக் கொண்டு போக வேண்டுமென்கிறார்; காந்தம்மா பண உதவி செய்ய மறுத்துவிடுகிறாள். வேறு வழியின்றிப் பார்வதியின் நகைகளை விற்று மதனப்பள்ளி யாத்திரை நடைபெறுகிறது.

நகை யில்லாமல் திரும்பிய பார்வதியை மாமியார் ரங்கம்மா அடித்து ஹிம்சிக்கப் போகிறாள்; கணவன் வெங்கடேசன் உறுதியோடு அதைத் தடுத்து விடுகிறான். இது வரையில் பூனைபோல் அடங்கிக் கிடந்த தன் மகன் புலி போல் சீறுவதைக் கண்ட ரங்கம்மா மருமகளிடம் பிரிய முள்ளவள் போல் பாசாங்கு செய்ய ஆரம்பிக்கிறாள்.

மதனப்பள்ளியில் டாக்டர்கள் இனி நாராயணசாமி வீட்டுக்குப் போகலா மென்று கூறி விடுகின்றனர். அதே சமயம் அவர்கள் வீடு ஏலம் போய்விட்ட தென்ற செய்தி வருகிறது. நாராயணசாமியும் லக்ஷ்மியும் காந்தம்மா வீட்டுக்கு வருகின்றனர்; காந்தம்மா இடம் கொடுக்க மறுத்து விடுகிறாள்.

நாராயணசாமியிடம் காசிம் என்ற ஒரு உண்மையான சேவகன் இருந்தான். கஷ்ட காலத்திலும் அவன் சங்கரய்யனைப்போல் இவர்களை விட்டு விலக விரும்பவில்லை. இவர்களாகவே தான் அவனது நன்மையை உத்தேசித்து வற்புறுத்தி விலக்குகிறார்கள். அவன் இப்போது ஜட்கா வண்டி ஓட்டிப் பிழைக்கிறான்.

வேறு வழியின்றி இருக்க இடம் தேடிச் செல்லும்போது, நாராயணசாமியின் மேல் காசிம் ஜட்கா மோதி விடுகிறது. தன் எஜமானென்றறிந்த காசிம் அவர்களை ஒரு குடிசையில் குடி வைத்து வேண்டிய உதவி செய்கிறான்.

தன் மகனே தனக்கெதிராய் மாறியதைக் கண்ட ரங்கம்மா எப்படியாவது பார்வதியை ஒழித்துவிட வேலைக்காரியின் உதவியால் அவளுக்கு விஷம் வைக்கிறாள்; தவறிப்போய் அவள் கணவன் வெங்கடேசன் அதைச் சாப்பிட்டு விடுகிறான். நல்ல வேளை, உடனே கவனித்ததால் பிழைத்துக் கொள்ளுகிறான். இதன்மேல் பார்வதி தன் கணவனை விஷம் வைத்துக் கொல்ல முயற்சித்தாளென்று மாமியாரும் மகனுமாக அவளை வீட்டை விட்டுத் துரத்தி விடுகின்றனர்.

பார்வதி கண்ணீரும் கம்பலையுமாய்த் தாய் வீடு திரும்புகிறாள். லக்ஷ்மி பார்வதியுடன் போய் ரங்கம்மாளைச் சமாதானம் செய்ய முயல்கிறாள், பலிக்கவில்லை.

பார்வதி துக்கம் தாங்காமல் நாளுக்கு நாள் தேய்ந்து போகிறாள்; அவளையும் நோய் பிடிக்கிறது. ஒரு பக்கம் கணவன், மறுபக்கம் மகள்; இரு நோயாளிகளிடையே லக்ஷ்மி திண்டாடுகிறாள். காசிம் தன்னாலியன்ற உதவி செய்கிறான்.

இதற்குள் ரங்கம்மாளுக்கும் வேலைக்காரிக்கும் நடந்த தகராறில் விஷ விஷயம் வெளிப்பட்டுவிடுகிறது. தன் தாயாரின் அக்கிரமத்தை அறிந்த வெங்கடேசன் அவளை உதாசீனம் செய்துவிட்டுப் பார்வதியைப் பார்க்க வருகிறான்.

பார்வதி மரணத் தறுவாயில் இருக்கிறாள்; கணவனும் தன்மேல் ஏற்பட்ட பழி நீங்கியதென்று அறிந்த பார்வதி மனச் சமாதானத்தோடு இறந்து போகிறாள்.

பார்வதியை இழந்த வெங்கடேசன் பைத்தியம் பிடித்தவன் போல் தாயாரைக் கொல்ல ஓடுகிறான்; அங்கே அவன் தாய் விழுந்து இறந்து கிடக்கிறாள்; அவனுக்கு உண்மையாகவே பைத்தியம் பிடித்து விடுகிறது.

காந்தம்மாளின் மானேஜரான சங்கரய்யன் ஷேர் மார்க்கெட் வியாபாரத்தில் அவளை ஈடுபடுத்துகிறான். அதன் மூலம் சங்கரய்யனுக்கும் ஷேர் வியாபாரி கோடீஸ்வரன் சிதம்பரத்தின் மானேஜர் பாலுவுக்கும் பரிச்சயம் ஏற்படுகிறது. பாலு தாராவை மணம் செய்து கொண்டு காந்தம்மா சொத்தையும் அனுபவிக்க இருவரும் திட்டம் போடுகின்றனர். காந்தம்மா தன் மகளுக்குப் பாலு இருபதாயிரம் ரூபாய் நகை போட வேண்டுமென்கிறாள். அப்படியே ஆகட்டுமென்று சங்கரய்யனும் பாலுவும் ஒப்புக் கொள்ளுகின்றனர்.

வீட்டைவிட்டு வெளியேறிய சந்திரன் பம்பாய் ஆர்ட் காலேஜில் சேர்ந்து பட்டம் பெற்று ஊர் திரும்புகிறான். தாரா மூலம் தன் பெற்றோர் இருக்கும் இடத்தை அறிந்து அங்கு போகிறான்.

நாராயணசாமி மரணத் தறுவாயிலிருக்கிறார், தன் மகன் வெற்றியைக் கேட்டு சந்தோஷத்தோடு அவர் மூச்சு நின்றுவிடுகிறது. சங்கரய்யன் தாராவின் காதலன் சந்திரன் வந்து விட்டானென்றும், அவனைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கினாலன்றி தாராவின் மனம் அவன் பால் ஈடுபடாதென்றும் பாலுவைத் தூண்டிவிடுகிறான்.

காசிம் உதவியால் சந்துரு படம் போட ஆரம்பிக்கிறான்; ஆனால் பாவம்! காசிம் லாரி மோதி இறந்து போகிறான். உற்றாரைக் காட்டிலும் உள்ளன்போடு உதவிய காசிம் படத்தை வைத்து லக்ஷ்மியும் சந்துருவும் தியாக மூர்த்தியென்று வணங்குகின்றனர்.

தான் தயாரித்த படங்களை விற்க முயன்று தோல்வியுற்ற சந்திரனுக்கு கோடீஸ்வரன் சிதம்பரம் தன் படத்தைப் போடச் சொல்லிப் பணம் தருகிறான். இந்த வகையில் பாலுவுக்கும் சந்திரனுக்கும் பரிச்சயம் ஏற்படுகிறது.

பணத்தைக் கண்ட லக்ஷ்மி காந்தம்மாளிடம் சந்திரனுக்காகப் பெண் கேட்கப் போகிறாள். காந்தம்மாள் இருபதாயிர ரூபாய் நகை போடுபவனுக்குத்தான் தன் பெண்ணைத் தருவேன் என்று மறுக்கிறாள்.

மெதுவாக பாலு சந்துருவுக்குக் குடிக்கக் கற்றுக்கொடுக்கிறான். குடிவெறியில் சந்துரு தாராவைக்கூட அடித்து விடுகிறான். திருடியும்கூடக் குடிக்கிறான்; கடைசியில் தாய்க்கு இனிமேல் குடிப்பதில்லை யென்று சத்தியம் செய்கிறான்.

சங்கரய்யனும் பாலுவுமாய்க் கோடீஸ்வரன் சிதம்பரத்தைக் குத்திவிட்டு, தாராவுக்குப் போடவேண்டிய நகைக்காகப் பணத்தைக் கொள்ளை யடிக்கின்றனர். அச்சமயம் படத்தைக் கொடுக்க வந்த சந்திரனை அக்கொலைக் குற்றத்தில் மாட்டி விடுகின்றனர். சந்திரன் கைது செய்யப்படுகிறான்.

தாராவுக்குப் பரிசமாக இருபதாயிரம் ரூபாய் நகைகளைப் பாலு காந்தம்மாளிடம் கொடுக்கிறான். கல்யாணம் ஏற்பாடாகிறது. தாரா அழுது துடிக்கிறாள்; லக்ஷ்மி மகனைக் காணச் சிறைக்குச் செல்கிறாள்.

தாராவின் கதி யென்ன? சந்திரனின் கதி யென்ன?

வெள்ளித் திரையில் காணுங்கள்.

பாட்டுகள்

1 **சந்திரன் — மாணவர்கள்**

சல் - சலோ சலோசைகிள் - வெகு
தமாஷ் தமாஷ் பல் - குஷி குஷி சல்
சலோ சலோ சைகிள் -
இது இது வேகம் - இனு இனு மோகம்
விரைவினில் வீட்டுக்குப் போவோம் - நாம் சல்
சலோ - சலோ சைகிள் -
தடை வந்தால் ப்ரேக் - தடையில்லை என்றால் ஜோர்
பாய்ந்தாலே ஜோர் - பஞ்சர் விழுந்தால் ஸ்டாப்
காற்றடிப் பதாலே - கால் மிதிப்பதாலே
காரினும் வேகமாய் போவோம் நாம் - சல்
சலோ - சலோ சைகிள் -
சாத்தியுகம் கண்டோம் நாமே -
சாந்தி யுகம் பெறுவோம் நாமே
புது வாழ்வின் பெருமை நமதே
புதுமைப் பாதையில் போவோம் - நாமே - சல்
சலோ - சலோ சைகிள் - (வெகு தமாஷ்)

2 **லக்ஷ்மி**

ஆதாரம் நீயே - அருள் புரிவாயே
ஆநந்த மாயே - அனைத் தாயே (ஆதாரம்)

சீதள குங்கும சோபித ஜனனி
ஸ்ரீதரன் மார்புறை நித்ய கல்யாணி (ஆதாரம்)

பெண்மைக் கெல்லாம் பெருந்திருவே - மனைப்
பெருமையின் கற்பக தருவே
கனவிலும் நனவிலும் உனை மறவேனே
கவலைகள் தீர்த்தே காத்தருள்வாயே (ஆதாரம்)

3 **பார்வதி கல்யாணம் — அலங்காரம்**

தாரா — சிநேகிதர்கள்

எல்லோரும் : சிங்காரமே - எழிலலங்காரமே ஜோராய்
கல்யாணமே -
கண்களிலே காதல் ஒளி பாராய் (சிங்காரமே)

தாரா : வலையில் விழுந்ததே - வலைவிழிமானே
மணமகள்தானே -
மயங்கும் ஆசைத் தேனே (சிங்காரமே)

எல்லோரும் : மண மகள்தானே - மயங்கும் ஆசைத்
தேனே (சிங்காரமே)

ஒருத்தி : என் - கன்னுன கண்ணே - இந்த
வின்னுனம் என்னே?
காணவே போறோம் - நீ - செய்யும் குடித்தனம்

எல்லோரும் : காணவே போறோம் நீ செய்யும் குடித்தனம்

மற்றொருவன் : வாடிக்கை யாச்சே - உன்
அண்ணியின் இந்த பேச்சே
வேடிக்கை தான்கம்மா -
வினையில்லை காணம்மா! (சிங்காரமே)

எல்லோரும் : வேடிக்கை தான்கம்மா -
வினையில்லை காணம்மா - (சிங்காரமே)

தாரா ; வல்லாள கண்ட - வாயாடும் சண்ட
மாப்பிள்ளை வீடே - மல்லாடும் காடே

எல்லோரும் : மாப்பிள்ளை வீடே - மல்லாடும் காடே
தாலாட்டு பாடணும் - தாளங்கள் போடணும்

ஒருத்தி : அவர்முகம் தன்னையே -
அப்போது பாக்கணும்

எல்லோரும் : அவர்முகம் தன்னையே -
அப்போது பாக்கணும்
தாலாட்டு பாடணும் - தாளங்கள் போடணும்

எல்லோரும் : மின்னும் பேரழகியே - வா! வா!
பொன்னும் மணியுமாய் நீ வா! வா!
கன்னல் வாழ மண மண்டப மேவி
கண்ணின் மணியே நீ வா! வா! வா!
பொன்னும் மணியுமாய் நீ வா! வா! வா!

4 **தாரா — சந்திரன்**

தாரா : அத்தான் போடும் பொம்மையே
அனுமார் மூஞ்சி பொம்மையே - வெண்
கொக்கும் போலக் கோணலே
கோணங்கிக் கூனலே
தலையாட்டும் - பலே பொம்மையே
ஏ அத்தான் - யாரிவரோ!

(26)

சந்திரன்: உல்லாச நேரம்
ஊஞ்சல் சிங்காரம்
தாரா ஒய்யாரம் - தன்னோடு கூடவே
ஆடிப் பாடும் சந்திரன்;
ஆனந்த சந்திரன்;
கண்டாயா - யாமினியே!

தாரா: மேகப் பூங்காவிலே - ராகச் செந்தேனே
தாரையின் மனதையே தான் கொள்ளை கொண்டவனே
இந்தச் சந்திரன்!

சந்திரன்: ஆகாய வீதியாம் - அழகான ஜோதியாம்
அம்புலிமாமனை
அன்போடு கொண்டவள்
இந்தத் தாரையாம்.

தாரா: இவ்வாதமெல்லாம் - இனி எதுக்காக
இணக்காரந்தானே!

சந்திரன்: இணக்காரம் பாடும் -
இளங் காதல் ஜோடி நாம்
இருவரும் கூடி! -

இருவரும்: தாரா சந்திரன் காதலே - போல்
இல்லை உலக மீதிலே - எழில்
மலரும் மணமும் போலவே
நம் காதல் ஜீவிதம்
அ ஹா ஹா - நம் ஜீவிதம்
ஓ ஹோ ஹோ - பலே சோபிதம்.

5. பார்வதி: நாதனை மறவேனே - ஸ்ரீரங்க
நாதனை மறவேனே - காவேரி
நாடிவலம் செய்யும் நாயகன் - (ஸ்ரீரங்க)

வேதனை தீர்த்திடும் - பாதனே மெஞ்ஞான
போதனை முக்தி - ப்ரணாதனே - (ஸ்ரீரங்க)

பாராமலே உலகனைத்தும் பார்ப்பான்
பசுங்கதிர் வண்ணன் - கமலக் கண்ணன்
கோதை வேண்டி என்னை - ஆதரித்தாலும்
வேதனைப் படவே - விட்டு விட்டாலும் -
அவன் (நாதனை)

தாரா: ஓ ஹோ ராஜா -
நிலவொளி வீசும் கலை ராஜா!
நீ எங்கு சென்றாயோ?
ஓ ஹோ ராஜா!

சந்திரன்: வா வா ராணி
கதிரொளி வீசும் கலைவாணி
கண்ணான கல்யாணி;
வா வா ராணி! -

தாரா: ஆனந்த மாலைய மாலையிலே
ஆடுவோம் மாமலர்ச் சோலையிலே
அகமுறும் கோகிலே - மழுதினை கூடும்;
அது ராகமே பாடும்;

சந்திரன்: உடல்களிரண்டே யானாலும்
உயிரொன்று தானே மென்மேலும்
உளமிஞ்சும் காதற் செந்தேனே
உனை யென்றுமே மறவேன் - நானே!

தாரா: இதய வீணையின் கானமதே
இனிமையான காதல் வானமதே
இருவரும் ஒன்றாய்ப் போவோமே
இறவாத ப்ரேமையில் வாழ்வோமே

சந்திரன்: இழையும் வெண்ணிலா ஒளியினிலே - தான்
இளந் தென்றல் வீசும் கனியிலே

தாரா: வானந்தம் வரை யாடியும் பாடியுமே
வாகான காட்சிகள் காண்போமே

இருவரும்: வானந்தம் வரையாடியும் பாடியும்
வாகான காட்சிகள் காண்போமே

சந்திரன்: எமதுள்ளமே சுகவாரியதாம்!

தாரா: எமக்கருளும் ஜோடு - மதியமுதாம்!

இருவரும்: எம் காதல் சேர்ந்தியதாம்
ஆஹா - இன்பம்.

பாரவதி

என்னுசையே - பாழானதே
இனி வாழ்வேனோ!
நிருமா - என்றுமிறும் என் சோகவாழ்வு மாறுமா?
தீராத துயரம் - வாடுமென் மனதின்
வேதனை மாறுமா? (நிருமா)

நிரபராதி நான் வீண் அபவாதமா
கதியிலையா என்றேறும்?
நிலையது மாறி - நாதனைச் சேரும்
புண்ய தன்னாளைக் காண்பேனோ? (நிருமா)

8 டான்ஸ்-

சரி : இந்த உலகமே பொய்யடா!
சொர்க்கமும் - நரகமும் பொய்யடா!
இன்பமாக நீ ஆடடா பாடடா!

பல்லவி : நாளை என்பது ஏதடா - இந்
நாளே இன்பம் காணடா - (நாளை)

சரி : உன் கையில் எல்லாம் விளையாடா -
என் டான்ஸ் மறு பாரடா -
சந்தேகம் மேனடா?
சமயம் இது நாளடா -

பல்லவி : நாளை என்பது ஏதடா - இந
நாளே இன்பம் காணடா - (நாளை)

9. தாரா

இவை காத்த இனி யாரோ
எதுமே வழிகாணேனே
இவ்வாறு தாழ்வா?
இதுவேயென வாழ்வா? -
என்னுசை விறுவத்த - ஏமாறமாய்ப் போனதே -
எதாகுமோ - எது நேருமோ?
இனி நாளெல்லாம் துயராகுமோ - (என்னுசை)

ஆருயிராம் என் தனயனே
அவமாகியே போவதா!
கண்ணீர்த் து - கடலாகுமா -
கரைகாணுமா - கதிநேராகுமா (என்னுசை)

ANANDA VIKATAN PRESS 1CP15 — 50 000 cop 48



இப் புத்தகத்தின் விலை அணு